CC.No. 198/2024
PW – 1
11.08.2026
பெயர் : கோவிந்தராஜன்
த/பெ. : சௌவுந்தராஜன்
எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக மனு செய்து அனுமதிக்கப்பட்டது.

**<u>மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்ததாக சொல்லும் இடம் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான். எனக்கு முன்பாக சுமார் 500 மீட்டர் தூரத்தில் எனது தகப்பனார் சென்றார் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு முன்பாக இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான். நான் டமார் என்று சத்தம் கேட்டுதான் அந்த பக்கம் பார்த்தேன். அப்போது எனது தகப்பனார் தார் ரோட்டில் கீழே விழுந்துகிடந்தார். அப்போது ஆட்கள் கூட்டமாக வந்து விட்டார்கள். அந்த இடத்தில் யார்யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் மீது மோதிய வாகனம் பல்சர் இருசக்கரவாகனம் ஆகும். அந்த வாகனமும் அந்த இடத்தில் கீழே கிடந்தது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காவிட்டாலும் விபத்திற்கு எனது தகப்பனாரின் கவனக்குறைவு தான் காரணம் என்று கூறுகிறேன். எனது தகப்பனார் சாலையின் இடதுபக்கம் செல்லாமல் சாலையின் நடுபகுதியில் நடந்து சென்றதுதான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/–கோவிந்தராஜன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**